நேரத்திலே கேட்டுக் கொள்கிறேன். காரணம், எதிர்காலத்திலே, இது ஒரு மிகப்பெரிய சூனியமான நிலையை உருவாக்கிவிடுமோ என்ற அச்சநிலையின் காரணமாக, இதிலே அரசாங்கம் மிகவும் கவனம் எடுத்துக் கொண்டிருக்கிறது. அதேபோல், blindness control-ஐப் பொறுத்தவரை, ஒரு வேகமான நடவடிக்கையை எடுத்து, இரண்டாயிரம் ஆண்டிலே, நாம் "அச்சீவ்' செய்ய வேண்டும் என்ற அந்த 'டார்கெட்'-ஐ இன்னும் இரண்டு, மூன்று ஆண்டுகளுக்குள்ளே நாம் முடித்துவிட வேண்டுமென்ற முயற்சியை எடுத்து, இப்போது Eye Camp -ஐ, நாம் நடத்தத் துவங்கியிருக்கிறோம். 6 மாத காலத்திற்குள்ளே, 'பேக்—லாக்' என்னென்ன இருக்கிறதோ, அத்தனை கேஸ்களையும் முடிக்க வேண்டும் என்ற ஒரு திட்டத்தை வகுத்து, நாம் அவர்கள் கையிலே கொடுத்திருக்கிறோம். இப்போது அவர்கள் அதைச் செய்து கொண்டிருக்கிறார்கள். பிப்ரவரி மாதம் 24-ஆம் தேதி, மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுடைய பிறந்த நாள் அன்று, அந்தத் திட்டத்தை நாம் துவக்கினோம். அன்றைக்கே, ஏறத்தாழ 7 ஆயிரம் பேருக்குச் சிகிச்சை அளிக்கப்பட்டு, கண் அறுவைச் சிகிச்சை செய்யப்பட்டிருக்கிறது. எனவே, அது சிறப்பாகச் செய்யப்படுகிறது. அந்த நோயாளிகளைக் கண்டு பிடிப்பதற்காக, 'ஐடன்டிபை' செய்வதற்காக சில பேருக்கு நாங்கள் பயிற்சிக் கொடுத்திருக்கிறோம். அது Male Health Worker-ஆக இருந்தால் சரியாக இருக்குமென்று தேடிப் பிடித்து, அவர்களுக்கு அந்தப் பயிற்சியைக் கொடுத்து, அந்தப் பயிற்சியின் மூலமாக அவர்கள் இப்போது நமக்கு அந்த நோய்களைக் கண்டுபிடித்துக் கொடுக்கிறார்கள். எனவே, வி.எச்.என்.-களை, அதிலே இருந்து மாற்றுவது சரியாக இருக்காது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினா எண் 125, டாக்டர் பிட்ரிக்ஸ் டி' சோசா, மாண்புமிகு போக்குவரத்து மற்றும் வனத்துறை அமைச்சர்.

125—

PROTECTING NILGIRI TAHR IN WESTERN GHAT FORESTS

*23396— **Dr. BEATRIX D' SOUZA :**

Will the Hon. the Minister for Transport and Forests be pleased to state :-

(a). Whether the Government is aware that poaching is rampant in the Western Ghat Forests and the Nilgiris Tahr (IBEX) is in danger ?

(b) if so, steps taken to prevent poaching ?

[*1995 மார்ச் 28*

மாண்புமிகு திரு. கே. ஏ. செங்கோட்டையன், போக்குவரத்து மற்றும் வனத்துறை அமைச்சர் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மேற்குத் தொடர்ச்சி மலைக்காடுகளில் வேட்டையாடுதல் மிகுந்துள்ளது என்பதும், நீலகிரி வரையாடு ஆபத்தான நிலையில் உள்ளது என்பதும் ஏற்கத்தக்கதல்ல.

(ஆ) இவ்வினாவிற்கு இடமில்லை.

Dr. BEATRIX D'SOUZA : Hon. Speaker, Sir, sometime ago, I had read an article in a magazine which said that the Nilgiri Tahr was hunted and its flesh exported to Middle-East countries where the flesh is considered a delicacy. In last year's policy note, there was no statistics available in this regard. I am, however, satisfied with the answer of the Hon. Minister and I have no further questions.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. வி.பி. சந்திரசேகர்.

திரு. வி.பி. சந்திரசேகர் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பொதுவாகவே துப்பாக்கி உரிமம் வழங்குகிறபோது, வேட்டையாடுவதற்கு என்று உரிமம் வழங்குவதில்லை. பாதுகாப்புக்கு என்று பெற்றுக் கொள்கிறார்கள். அப்படிக் கொடுக்கிறபோது, குழல் துப்பாக்கிகளுக்கு உரிமம் கொடுக்காமல், 'பிஸ்டல்', 'ரிவால்வர்' போன்றவற்றிற்கு உரிமம் கொடுக்கலாம். குழல் துப்பாக்கிகளுக்கு உரிமம் கொடுக்க மறுத்தால் வேட்டையாடுவதைத் தடுக்க முடியும். ஆகவே, வனத்துறை, அரசுக்கு இதை வேண்டுகோளாக வைக்க முன்வருமா என அறிய விரும்புகிறேன்.

முற்பகல் *10-30*

மாண்புமிகு திரு. கே.ஏ. செங்கோட்டையன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் கேட்ட கேள்விக்கும் இந்தக் கேள்விக்கும் சம்பந்தமில்லை. மாண்புமிகு உறுப்பினரவர்கள் கேட்கிறபோது அங்கே ரிவால்வர், பிஸ்டல் போன்றவைகளுக்கு அனுமதி வழங்கலாம் என்று சொன்னார்கள். அது காவல்துறை மூலமாக, மாவட்ட ஆட்சித் தலைவர் மூலமாக பரிந்துரை செய்து, அவர்களுக்குப் பாதுகாப்பிற்காக வழங்கலாம். வனத்துறையைப் பொறுத்தவரையிலும், இன்றைக்குப் பல்வேறு வனத்துறை பகுதிகளில்

1995 மார்ச் 28]

அவர்கள் பிஸ்டல்களையும், துப்பாக்கிகளையும் கொண்டு செல்வதற்கு அரசு அனுமதிப்பதில்லை. அதற்காக உரிய நடவடிக்கை மேற்கொண்டு, இதுபோன்று வேட்டையாடுதல் தவிர்க்கப்பட்டிருக்கிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : டாக்டர் ஆ.வெ. புருஷோத்தமன்.

டாக்டர் ஆ.வெ. புருஷோத்தமன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இப்போது மேற்குத் தொடர்ச்சி மலை மட்டுமல்லாமல், பல்வேறு வனப் பகுதிகளில் 'Farewell to arms' என்ற போர்டுகள் வைக்கப்பட்டிருக்கின்றன. இப்படிப்பட்ட போர்டுகள் எல்லா வனப் பகுதிகளிலும் வைக்கப்பட்டிருக்கின்றதா? மேலும் இப்படிப்பட்ட குற்றங்களைத் தடுப்பதற்காக பறக்கும்படை ஏதாவது உள்ளதா? இப்படிப்பட்ட திட்டத்திற்கு மத்திய அரசு ஏதாவது நிதியுதவி செய்கின்றதா என்பதை மாண்புமிகு அமைச்சர் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. ஏ. செங்கோட்டையன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இதுபோன்ற தவறுகள் நடக்கக்கூடாது என்பதற்காக பறக்கும்படை வைத்திருக்கிறோம். ஒயர்லெஸ் வைத்துக் கொண்டிருக்கிறோம். உயர்ந்த ஆயுதக் கருவிகளை அவர்களிடத்திலே தந்து உடனடியாக நடவடிக்கை மேற்கொள்வதற்கு அரசு நடவடிக்கை எடுத்துக் கொண்டிருக்கிறது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. இரா. தாமரைக்கனி.

திரு. இரா. தாமரைக்கனி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மேற்குத் தொடர்ச்சி மலைகளில் வேட்டையாடுபவர்கள் துப்பாக்கி வைத்து வேட்டையாடுவது கிடையாது. வேட்டைநாய் என்று கிராமப்பகுதியில் இருக்கிறது. வேட்டைநாய், வலை, கன்னிவெடி போன்றவைகளை வைத்துத்தான் அந்த மிருகங்களை வேட்டையாடுகிறார்கள். முயல், காட்டெருமை, வரையாடுகள் போன்றவைகளை வேட்டையாடுகிறார்கள். ஆகவே மனிதர்கள் காட்டிற்குள் நுழைவதற்குத் தடையிருக்கிறது. எனவே குறைந்த கட்டணம் கொடுத்து வேட்டையாட நுழைத்துவிட்டு வேட்டையாடிக் கொண்டு வருகிறார்கள். ஆகவே முழுமையாக காட்டிற்குள் மனிதர்கள் நுழைவதற்குத் தடை விதிக்கப்படுமா? மிருகங்கள் காப்பாற்றப்படுமா என அறிய விரும்புகிறேன்.

[1995 மார்ச் 28

மாண்புமிகு திரு. கே. ஏ. செங்கோட்டையன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, காட்டுப் பகுதியிலே மனிதர்கள் நடமாடக்கூடாது என்பதில்லை. இருந்தாலும்கூட, காட்டுப் பகுதியில் 'ஹில் ஸ்டேஷன்ஸ்' என்று சொல்லப்படுகின்ற மலைப் பகுதிகளில் மலைவாழ் மக்கள் வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள். அவர்கள் காட்டுப்பகுதியிலே வந்து செல்லவேண்டியிருக்கிறது. சில பாதைகளில் மலையைக் கடந்து அந்தக் கிராமங்களுக்குச் செல்லவேண்டியிருக்கிறது. அதையெல்லாம் அனுமதித்தாக வேண்டியிருக்கிறது. இருந்தாலும்கூட, அரசு அந்தப் பகுதியிலே வேட்டையாடுவதைத் தடுப்பதற்காக தீவிரமான நடவடிக்கை மேற்கொண்டிருக்கிறது. ஆகவே, வேட்டையாடுவது குறைக்கப்பட்டிருக்கிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. கி. தருமலிங்கம்.

திரு. கி. தருமலிங்கம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வன விலங்குகளை வேட்டையாடுபவர்களுக்கு நமது அரசு சட்டத்தின் வாயிலாக குறைந்தபட்ச தண்டனை எவ்வளவு; அதிகபட்ச தண்டனை எவ்வளவு என்பதைத் தங்கள் மூலமாக அறியவிரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. ஏ. செங்கோட்டையன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அவர்களுக்கு தண்டனை குறைந்த அளவு ஒரு மாத காலம். அவர்களைக் காவலில் வைக்கலாம். அதுபோன்று, அவர்கள் வேட்டையாடுவதில் எந்தெந்த மிருகங்களை அவர்கள் வேட்டையாடுகிறார்களோ, அதற்கேற்ப அந்த அபாரத் தொகையும் விதிக்கப்படுகிறது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினா எண் 126, திரு. ஏ.கே.சி. சுந்தரவேல், மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்.

126—

குரிசலாப்பட்டில் கால்நடை மருந்தகம் ஆரம்பித்தல்.

*22980—**திரு. ஏ. கே. சி. சுந்தரவேல் :**

மாண்புமிகு கால்நடை பராமரிப்புத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

திருப்பத்தூர் தொகுதி, குரிசிலாப்பட்டில் கால்நடை மருந்தகம் ஆரம்பிக்க அரசு நடவடிக்கை எடுக்குமா ?